| **9.0**<br>**அற்கைல் ஏலைட்டுக் களின் கட்டமைப்பிற்கும் இயல்புகளுக்குமிடையான தொடர்பை நுணுகி யாய்வார்.** | 9.1 அற்கைல் ஏலைட்டுக்களின் கட்டமைப்பு, காபன் - அலசன் பிணைப்பின் முனைவுத்தன்மை, தாக்கங்கள் என்பவற்றை நுணுகியாய்வார் | • வகைகள்<br>  • முதல்<br>  • வழி<br>  • புடை<br>• C-X பிணைப்பின் முனைவுறும்தன்மை (X = F, Cl, Br, I)<br>• அற்கைல் ஏலைட்டுகளில் நடைபெறும் கருநாட்ட பிரதியீட்டுத்தாக்கம்<br>  • கருநாடியாக ஐதரொட்சைல் அயன்<br>    • நீக்கல் தாக்கம்<br>  • கருநாடியாக சயனைட்டு அயன்<br>  • கருநாடியாக மும்மைப்பிணைப்பு காபன் உடைய, அசற்றலைட்டு அயன் (alkynide)<br>  • கருநாடியாக அல்கொட்சைட்டு அயன்<br>• குளோரோபென்சின், வைனைல்குளோரைட்டுக்கள் என்பன அற்கைல் ஏலைட்டுக்கள் உள்ளாகும் கருநாட்ட பிரதியிட்டு தாக்கங்களுக்கு உள்ளாகாமை.<br>• மக்னீசியத்துடன் அற்கைல் ஏலைட்டின் தாக்கம் (கிரிக்நாட்டின் சோதனைப் பொருளைத் தயாரித்தல்)<br>  • உலர் நிபந்தனைகளின் அவசியம்<br>  • உலோக - காபன் பிணைப்பின் தன்மை<br>  • புரோத்தன் வழங்கிகளுடன் தாக்கம்<br>    • அமிலங்கள்<br>    • அற்ககோல்கள்<br>    • அமீன்கள் | 11 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 9.2 பிணைப்பு உருவாகும்/உடையும் காலத்தின் அடிப்படையில் அற்கைல் ஏலைட்டுக்களின் கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கங்களை பரிசீலிப்பார். | • ஒரு படித்தாக்கம்<br>(ஒரே நேரத்திலேயே பிணைப்பு உடைதலும் பிணைப்பு உருவாதலும் நடைபெறும். தாக்க இடை நிலைகள் உருவாகாது.)<br>• இருபடித்தாக்கம்<br>(முதலாவதாக பிணைப்பு உடைதல் படி நிகழும். தாக்க இடைநிலையாக காபோனியம் அயன் உருவாகும். இரண்டாவது படியில் காபோனியம் அயனுக்கும் கரு நாடிக்கும் இடையே பிணைப்பு உருவாகும்)<br>(இப்பொறிமுறைகளுக்கான சான்றுகள், மேற்கூறிய இரண்டு செயற்பாடுகளின் அடிப்படையிலான தாக்கங்களின் பாகுபாடு என்பன அவசியமற்றன.) | 01 |

## அலகு 10 - ஒட்சிசனைக்கொண்ட சேதனச் சேர்வைகள் 35 பாடவேளை

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 10.0 கட்டமைப்பிற்கும் இயல்பு களுக்கும் இடையிலான இடைத்தொடர்பை இனங் காண்பதற்காக ஒட்சிசன் அடங்கும் சேதனச் சேர்வைகளின் வகை களைத் தேடியாய்வார். | 10.1 அற்ககோல்களின் கட்டமைப்பு, காபன் - ஒட்சிசன் பிணைப்பு, ஒட்சிசன் - ஐதரசன் பிணைப்பின் முனைவுத்தன்மை, தாக்கங்கள் என்பவற்றை நுணுகியாய்வார். | • வகைகள்<br>  • முதல்<br>  • வழி<br>  • புடை<br>• பௌதிகப் பண்புகள்<br>  • கொதிநிலை<br>  • நீரிலும் வேறு சேதனக்கரைப்பான்களிலும் கரைதிறன்<br>• O-H பிணைப்பை உடைப்பதன் மூலம் நடைபெறும் தாக்கங்கள்<br>  • சோடியத்துடன் (ஒட்சிசனுடன் பிணைந்துள்ள ஐதரசனின் அமிலத்தன்மை)<br>  • காபொட்சிலிக் அமிலத்துடன் தாக்கம் (அற்ககோலுடன் ஏசைலேற்றமடைந்து எசுத்தர்களை உருவாக்கல்)<br>• C-O பிணைப்பை உடைப்பதன்மூலம் நடைபெறும் கருநாட்ட பிரதியீட்டுத்தாக்கங்கள்<br>  • கருநாட்ட பிரதியீட்டுத்தாக்கங்கள்<br>    • HBr உடன்<br>    • HI உடன்<br>    • $PCl_3$ உடன்<br>    • $PCl_5$ உடன்<br>  • $ZnCl_2$/செறி HCl உடன் தாக்கம் (லூக்காசின் சோதனை)<br>(C-O பிணைப்பை உடைப்பதன் மூலம் உருவாகும் காபோகற்றயன்களின் உறுதிநிலையின் மூலம் விளக்குதல்)<br>- பென்சைல் அற்ககோலின் தாக்கம் அவசியமன்று. | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | • செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் நீக்கல் தாக்கம் (நீரகற்றல் மூலம் அற்கீனை உருவாக்கல்)<br>• ஒட்சியேற்றம்<br>  • $H^+/KMnO_4$ உடன்<br>  • $H^+/K_2Cr_2O_7$ உடன்<br>  • $H^+/CrO_3$ உடன்<br>  • பிரிடினியம் குளோரோகுறோமேற்று (முதல் அற்க கோல் அல்டிகைட்டாகவும், வழி அற்ககோல் கீற்றோனாகவும் மாறுதல்.)<br>• **அற்ககோல்களின் இயல்புகளை பரிசோதித்தல்** | |
| | 10.2 காபன் - ஒட்சிசன் பிணைப்பு, ஒட்சிசன் - ஐதரசன் பிணைப்பின் அடிப்படையில் பீனோலின் தாக்கங்களைப் பகுத்தாய்வார். | • எளிய பீனோலாகிய ஐதரொட்சி பென்சீனின் கட்டமைப்பு<br>• அற்ககோலுடன் ஒப்பிடுகையில் அமிலத்தன்மை உயர்வாக இருத்தல்<br>• பீனோலின் தாக்கங்கள்<br>  • சோடியம் உலோகத்துடன்<br>  • NaOH உடன்<br>• அற்ககோல் ஈடுபடும் கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கங்களில் பீனோல் ஈடுபடாமை.<br>• **பீனோலின் இயல்புகளைப் பரிசோதித்தல்** | 04 |
| | 10.3 பினோலின் -OH தொகுதி பென்சின் வளையத்தின் தாக்கத்தில் ஏற்படுத்தும் விளைவை நுணுகியாய்வார். | • இலத்திரன்நாட்ட பிரதியீட்டுத்தாக்கம்<br>  • புரோமினேற்றம்<br>  • நைத்திரேற்றம் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 10.4 >C=O பிணைப்பின் முனைவுறும் தன்மை, நிரம்பாத தன்மையின் அடிப்படையில் அல்டிகைட்டுக் கள், கீற்றோன்களின் தாக்கங் களை நுணுகியாய்வார். | • அல்டிகைட்டு, கீற்றோன் ஆகியவற்றின் விசேட தாக்க மாகக் கருநாட்டக் கூட்டல் தாக்கங்கள்<br>• HCN உடன் தாக்கமும் பொறிமுறையும்<br>• கிரிக்நாடின் சோதனைப்பொருளுடன் தாக்கமும் பொறிமுறையும்<br>• 2,4-இருநைற்றோபீனைல் கைற்றசீன்(2,4 DNP) பிரெடியின் சோதனைப்பொருளுடன் கருநாட்டகூட்டலும் தொடர்ந்து நீரகற்றலும் (பொறிமுறை அவசியமல்ல.)<br>• $NaBH_4$ உடன் தாக்கம்<br>• $LiAlH_4$ உடன் தாக்கம் (விரிவான பொறிமுறையும், இடைநிலை விளைவுகளும் அவசியமன்று.)<br>• Zn.(Hg) செறிந்த HCl உடன் தாக்கம் (கிளமென்சனின் தாழ்த்தல் காபனைல் கூட்டம் மெதிலீன் கூட்டமாக மாறுதல்)<br>• அல்டிகைட்டை ஒட்சியேற்றல்<br>• அமோனியாசேர் $AgNO_3$ உடன் (தொலனின் சோதனைப் பொருளுடன்)<br>• பீலிங்கின் கரைசலுடன்<br>• $H^+/KMnO_4$ உடன்<br>• $H^+/K_2Cr_2O_7$ அல்லது $H^+/CrO_3$ உடன் (கீற்றோன்கள் இத்தாக்கங்களிற்கு உட்படாது என்பதை ஒப்பிடுக.)<br>• **அல்டிகைட்டுக்கள், கீற்றோன்களுக்கான சோதனைகள்** | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 10.5 அல்டிகைட்டுகளினதும் கீற்றோன்களினதும் அல்பா நிலையின் தாக்கத்தை தன் ஒடுக்கல் தாக்கமாக உதாரணப் படுத்தி இனங்காண்பார். | • அசற்றோன், அசற்றல்டிகைட்டு ஆகியன மாத்திரம் NaOH உள்ளபோது ஒடுக்கற்றாக்கம் (பொறிமுறை அவசியமற்றது.) | 04 |
| | 10.6 காபொட்சிலிக் அமிலங்களின் இயல்புகளையும் தாக்கங்களையும் ஏனைய ஒட்சிசனைக் கொண்ட சேதனச் சேர்வைகளுடன் ஒப்பிடுவார். | • பௌதிக இயல்புகள் - ஐதரசன் பிணைப்பின் முக்கியத்துவம்.<br>• உருகுநிலை / கொதிநிலை<br>• நீரிலும் வேறு சேதனக்கரைப்பான்களிலும் கரைதல் (இருபகுதியக் கட்டமைப்பு உருவாகுதல்) (Dimeric structures)<br>• -COOH தொகுதியின் தாக்குதிறன் கோலத்தை அல்டிகைட்டுக்கள், கீற்றோன்களின் $>C=O$ தொகுதியினதும், அற்ககோல்கள், பீனோல்களில் உள்ள -OH தொகுதியுடனும் ஒப்பிடுதல்<br>• O-H பிணைப்பு உடையும் தாக்கங்கள்<br>  • காபொட்சிலிக் அமிலங்களில் ஒட்சிசனுடன் இணைந்துள்ள ஐதரசனின் அமிலத்தன்மை<br>  • காபொட்சிலிக் அமிலங்களின் அமில இயல்பை அவற்றின் இணை மூலங்களின் உறுதியின் அடிப்படையில் அற்ககோல், பீனோல் என்பவற்றுடன் ஒப்பிடுதல்.<br>  • தாக்கங்கள்<br>    • Na உடன்<br>    • NaOH உடன்<br>    • $NaHCO_3$ உடன் | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | • C-O பிணைப்பு உடைதலுடன் நிகழும் தாக்கங்கள்<br>  • $PCl_5$ உடன் அல்லது $PCl_3$ உடன்<br>  • அற்ககோலுடன்<br>• $LiAlH_4$ மூலம் காபொட்சிலிக்கமிலத்தைத் தாழ்த்தல்<br>• **காபொட்சிலிக்கமிலங்களின் இயல்புகளை பரிசோதித்தல்** | |
| | 10.7 அமிலப் பெறுதிகளின் விசேட தாக்கங்களை நுணுகியாய்வார். | • அமிலக்குளோரைட்டுக்கள்<br>  • NaOH(aq) உடன் தாக்கமும் பொறிமுறையும்<br>  • தாக்கங்கள்<br>    • நீருடன்<br>    • அற்ககோலுடன்<br>    • அமோனியாவுடன்<br>    • $LiAlH_4$ முதல் அமீனுடன்<br>    • பீனோலுடன்<br>• எசுத்தர்கள்<br>  • ஐதான கனிப்பொருள் அமிலங்களுடன் தாக்கம்<br>  • NaOH கரைசல் உடன்<br>  • கிரிக்நாட்டின் சோதனைப்பொருளுடன்<br>  • உடன்<br>• ஏமைட்டுக்கள்<br>  • NaOH கரைசல் உடன்<br>  • உடன் தாழ்த்தல். | 03 |

3.2 தரம் 13 அலகு 11 - நைதரசனைக் கொண்ட சேதனச் சேர்வைகள் 15 பாடவேளை

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **11.0 நைதரசனைக் கொண்ட சேதனச் சேர்வைகளின் கட்டமைப்புக்கும் இயல்புகளுக்கும் இடையிலான தொடர்பை நுணுகியாய்வார்.** | 11.1 அமீன்களையும், அனிலினையும் அவற்றின் விசேட தாக்கங்களினதும், இயல்புகளினதும் அடிப்படையில் பகுத்தாய்வார். | • வகைகள்<br>  • அலிபற்றிக், அரோமற்றிக் அமீன்கள்<br>    • முதல் அமீன்கள்<br>    • வழி அமீன்கள்<br>    • புடை அமீன்கள்<br>  • அனிலீன் அரோமற்றிக் அமீனாக<br>    • புரோமீனுடன் அனிலீனின் தாக்கம்<br>• முதல் அமீன்களின் தாக்கங்கள்<br>  • அற்கைல் ஏலைட்டுடன்<br>  • அல்டிகைட், கீற்றோனுடன்<br>  • நைத்திரசு அமிலத்துடன்<br>  • அமிலக் குளோரைட்டுடன் | 06 |
| | 11.2 அமீன்களின் மூலத்தன்மையை ஏனைய சேதனச் சேர்வைகளின் மூலத்தன்மையுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துவார். | • அற்ககோல்களுடன் ஒப்பிடுகையில் அமீன்களின் மூலத்தன்மை<br>• அனிலினுடன் அலிபற்றிக்கு முதல் அமீன்களின் மூலத்தன்மையை ஒப்பிடுதல்<br>• ஏமைட்டுக்களுடன் ஒப்பிடுகையில் அமீன்களின் மூலத்தன்மை | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 11.3 ஈரசோனியம் உப்புக்களின் தாக்கங்களை நுணுகியாய்வார் | • ஈரசோனியம் தொகுதியை வேறு அணு அல்லது தொகுதி ஒன்றினால் மாற்றீடு செய்யும் தாக்கங்கள்<br>  • தாக்கங்கள்<br>    • நீருடன்<br>    • உபபொசுபரசு அமிலத்துடன்<br>    • CuCl உடன்<br>    • CuBr உடன்<br>    • CuCN உடன்<br>    • KI உடன்<br>• இலத்திரன் நாடியாக ஈரசோனியம் அயன் ஈடுபடும் தாக்கங்கள்<br>  • பீனோலுடன் இணைதல் தாக்கம்<br>  • 2-நப்தோலுடன் இணைதல் தாக்கம் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **12.0**<br>**இரசாயனத்தாக்கத்தின் தாக்கவீதத்தை துணிவதற்கும், வீதத்தைத் தாக்கவாறு கட்டுப்படுத்தவும் இயக்கஇரசாயனவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்துவார்.** | 12.1 இரசாயன தாக்கங்களின் தாக்க வீதத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைத் தீர் மானிப்பார். | • இரசாயன தாக்கத்தின் தாக்கவீதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்<br>  • வெப்பநிலை<br>  • செறிவு (அமுக்கம்)<br>  • பௌதிகநிலை (தாக்கிகளின் மேற்பரப்பு)<br>  • ஊக்கிகள்<br>    • ஏகவின ஊக்கல்<br>    • பல்லின ஊக்கல் | 05 |
| | 12.2 தாக்கிகளின் செறிவை தக்கவாறு கையாண்டு இரசாயனத்தாக்க வீதத்தைக் கட்டுப்படுத்துவார். | • தாக்கத்தின் வீதம்<br>• தாக்கிகளின் செறிவு சார்பாக வீதம்<br>$aA + bB \rightarrow cC + dD$<br>தாக்கி A தொடர்பாக தாக்கத்தின் வீதம் $\left(\frac{\Delta C_A}{\Delta t}\right)$ $\left(\frac{\Delta C_D}{\Delta t}\right)$<br>விளைவு D தொடர்பாக தாக்கத்தின் வீதம்<br>• தாக்கவீதத்தில் செறிவின் பாதிப்பு<br>• தாக்கவீத விதி, கூறுகள் தொடர்பான வரிசை, தாக்கம் ஒன்றின் வரிசை (மொத்த வரிசை)<br>  • தாக்கவீத மாறிலி<br>  • ஆரம்ப வீதம்<br>  • சராசரி வீதம்<br>  • மொத்த வரிசையின் அடிப்படையில் தாக்கங்களை வகைப்படுத்தல் (பூச்சிய வரிசை, முதலாம் வரிசை, இரண்டாம் வரிசை மாத்திரம்) | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| | | • முதலாம் வரிசைத் தாக்கத்தின் அரைவாழ்வுக் காலமும் வரைபின் மூலம் வகைகுறித்தலும் (சமன்பாடு அவசியமன்று)<br>• தாக்கவரிசையையும், தாக்கவீத மாறிலியையும் நிர்ணயிக்கும் முறைகள்.<br>• ஆரம்ப தாக்கவீதமுறை<br>• **Mg இற்கும் அமிலங்களுக்குமிடையான தாக்கத்தில் செறிவின் பாதிப்பை பரிசோதனை ரீதியாகத் தீர்மானித்தல்.**<br>• **$Na_2S_2O_3$ இற்கும் $HNO_3$ இற்குமிடையான தாக்கத்தில் செறிவின் பாதிப்பை பரிசோதனை ரீதியாக தீர்மானித்தல்**<br>• **இரும்பு(III), KI இற்குமிடையான தாக்கத்தில் செறிவின் பாதிப்பை பரிசோதனை ரீதியாக தீர்மானித்தல்** | |
| | 12.3 இரசாயனத்தாக்கத்தின் தாக்க வீதத்தின் மீது பல்வேறு காரணிகளின் செல்வாக்கை விவரிப்பதற்காக மூலக்கூறுகளின் இயக்கவியற் கொள்கையை பயன்படுத்துவார். | • ஒருபடித் தாக்கத்தின் சக்தி வரைபடம்<br>• ஏவற்சக்தி<br>• தாக்கமொன்று நடைபெற நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள்<br>• மூலக்கூறுகளின் மோதுகை.<br>• சார் அனுகூலமான திசையில் கோட்படுத்தப் பட்டிருத்தல்<br>• ஏவற்சக்தியை மீறியிருத்தல்<br>• மேற்படி காரணிகள் நிறைவு பெறுவதில் வெப்பநிலை, செறிவு, ஊக்கி, பௌதிகநிலை ஆகியன செல்வாக்குச் செலுத்தும் விதம் (ஆரினியசுவின் சமன்பாடு அவசியமல்ல) | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 12.4 இரசாயனத் தாக்கமொன்றின் வீதத்தை விபரிக்கத் தாக்கப் பொறிமுறையினைப் பயன்படுத்துவார். | • அடிப்படைத்தாக்கங்கள் (Elementary reactions)<br>• பல்படித் தாக்கங்கள்<br>  • சக்தி வரைபடங்கள்<br>    • நிலைமாறு சந்தர்ப்பமும் (தாண்டல்நிலை) (Transition state) இடைநிலைகளும்<br>• தாக்கவீதத்தை தீர்மானிக்கும் படிமுறையும் அது மொத்தத் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதமும் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **13.0**<br>**இயக்க சமநிலையிலுள்ள மூடிய தொகுதிகளின் பெரும்பார்வைக்குரிய பண்புகளை (Macroscopic properties) தீர்மானிப்பதற்காக சமநிலை பற்றிய எண்ணக் கருவையும் கோட்பாடுகளையும் பயன் படுத்துவார்.** | 13.1 தொகுதிகளில் காணப்படுகின்ற பெரும்பார்வைக்குரிய பண்புகளை (Macroscopic properties) சமநிலை பற்றிய எண்ணக் கருவின் துணையுடன் அளவறிரீதியாக துணிவார். | • தொகுதிகள் (மூடிய, திறந்த, தனியாக்கிய)<br>• நித்திய உறுதியிலுள்ள தொகுதி ( Systems in the steady state)<br>• இயக்கச் செயற்பாடும் மீள்தன்மையும்<br>• பெரும்பான்மைக்குரிய பண்புகள் (Macroscopic properties)<br>• சமநிலையில் நிலவும் தொகுதிகள்<br>  • இரசாயன<br>  • அவத்தை<br>  • அயன்<br>  • மின்வாய்<br>• சமநிலை விதி<br>  • சமநிலை மாறிலி<br>• இரசாயன சமநிலை<br>  • $K_C$, $K_p$<br>  • சமநிலைப்புள்ளி<br>  • இலீச்சற்றலேயரின் தத்துவம்<br>• **$Fe^{3+}/SCN^-$ தொகுதியைப் பயன்படுத்தி இயக்க சமநிலையில் உள்ள தொகுதி ஒன்றின் இயல்புகளை பரிசோதித்தல்**<br>• **$NO_2$, $N_2O_4$ வைக்கொண்ட சமநிலைத் தொகுதியில் வெப்பநிலையின் பாதிப்பைப் பரிசோதித்தல்**<br>• **நீரிற்கும் பியூட்டனோலுக்குமிடையில் எதனோயிக் அமிலத்தின் பங்கீட்டுக்குணகத்தைப் பரிசோதனை ரீதியாக துணிதல்** | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 13.2 ஏக இனத் தொகுதிகளில் திரவ - ஆவி சமநிலை மாறும் விதத்தை நுணுகியாய்வார். | • தூய திரவத்தொகுதிகள்<br>• திரவம், ஆவிக்கிடையான சமநிலை<br>• திரவ - ஆவி தொகுதியில் சமநிலை உருவாகும் விதத்தை மூலக்கூற்று இயக்கத்தின் துணையுடன் விவரிப்பார்.<br>• வெப்பநிலைக்கேற்ப நீரினதும் வேறு திரவங்களினதும் ஆவியமுக்கம் மாறும்விதம்<br>• ஆவியமுக்கமும் கொதிநிலையும்<br>• பதார்த்தம் ஒன்றின் மாறு நிலைப்புள்ளி (Critical point of a substance)<br>• மும்மைப்புள்ளி | 05 |
| | 13.3 துவித திரவ தொகுதிகளின் திரவ - ஆவி சமநிலை மாறும் விதத்தை நுணுகியாய்வார். | • திரவ - திரவத் தொகுதி<br>• முழுமையாக கலக்கும்தகவுள்ள திரவ - திரவ தொகுதி<br>• பகுதியாக கலக்கும்தகவுள்ள திரவ - திரவ தொகுதி<br>• முழுமையாக கலக்கும்தகவற்ற திரவ - திரவ தொகுதி<br>• இரவோற்றின் விதி<br>• இலட்சிய திரவத்தொகுதி<br>• இலட்சியமற்ற திரவத்தொகுதி<br>• முற்றாகக் கலக்கும் தொகுதிகளின் அவத்தை வரைபுகள் (Azeotropes தவிர)<br>• ஆவி அமுக்கம் - அமைப்பு அவத்தை வரைபுகள்<br>• வெப்பநிலை - அமைப்பு அவத்தை வரைபுகள்<br>• பகுதிபடக்காய்ச்சிவடித்தல் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 13.4 அரிதிற்கரையும் அயன்சேர் வைகளை கொண்ட சமநிலை தொகுதிகளின் இயல்புகளை அளவறிரீதியாக அறிவார். | • அயன்பெருக்கம்<br>AgCl(s) $Ag^{+}(aq) + Cl^{-}(aq)$<br>  • வீழ்படிவுறுதல்<br>  • கரையுந்தகவு (Solubility)<br>  • பொதுஅயனின் விளைவு<br>• கற்றயனின் பண்பறிபகுப்பின் பிரயோகம்<br>• **$Ca(OH)_2$ இன் கரைதிறன் பெருக்கத்தைப் பரிசோதித்தல்** | 06 |
| | 13.5 மென் அமிலங்கள், மென்காரங் கள், அமில உப்புக்கள், கார உப்புக்களை கொண்ட சம நிலை தொகுதிகளின் இயல்பு களை நுணுகியாய்வார். | • அமிலங்கள், மூலங்கள், உப்புக்கள்<br>  • இணைஅமிலங்களும் இணைமூலங்களும்<br>  • பல்மூலஅமிலங்கள் $(K_{sp})$<br>• கூட்டற்பிரிவுமாறிலிகள் $K_w, K_a, K_b$<br>• pH பெறுமானம்<br>• அமிலங்கள், (ஓர் மூல, இரு மூல) மூலங்கள் (ஓரமில), உப்புக்கள் என்பவற்றின் கரைசல்களின் pH பெறு மானத்தை துணிதல்<br>• காட்டிகள் பற்றிய கொள்கை<br>• அமில-மூல நியமிப்புக்கள்<br>  • நியமிப்பு வரைபுகள்<br>• சமவலுப்புள்ளியை தீர்மானித்தல் (கட்புலனாகும் முறைகள் - காட்டிகளை உபயோகித்து மட்டும்)<br>  • $pK_{In}$ பெறுமானங்களின் அடிப்படையில் நியமிப்பு களுக்குப் பொருத்தமான காட்டிகளை தெரிவு செய்தல். | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | • **வழங்கப்பட்ட பூக்களைப் பயன்படுத்தி காட்டிகள் தயாரித்தலும் அவற்றின் pH வீச்சுக்களை பரிசோதனை ரீதியாகத் துணிதலும்**<br>• **pH யை சோதிப்பதன் மூலம் உப்புக் கரைசல்களின் அமில, மூல, நடுநிலைமையை பரிசோதனை ரீதியாகத் துணிதல்**<br>• **pH காட்டிகளைப் பயன்படுத்தி தரப்பட்ட கரைசல் ஒன்றின் அண்ணளவான pH பெறுமானத்தைத் தீர்மானித்தல்** | |
| | 13.6 தேவைகேற்றவாறு தாங்கல் கரைசல்களைத் தயாரிப்பார். | • தாங்கல்கரைசல்கள் (பண்பறிரீதியாகவும் அளவறி ரீதியாகவும்)<br>• என்டர்சன் சமன்பாட்டின் வருவிப்பும் அதன் பிரயோகங்களும் (ஓர்மூல தொகுதிகள் மட்டும்; இருபடிச் சமன்பாடுகளுடன் தொடர்புடைய கணித்தல்கள் அவசியமன்று.)<br>• தாங்கற்கரைசல் ஒன்றின் pH பெறுமானம் | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **14.0 பிரயோகரீதியில் முக்கியத்துவம் பெறும் மின்னிரசாயனத் தொகுதிகளை நுணுகி ஆராய்வார்.** | 14.1 கரைசலொன்றில் அடங்கும் கரையங்களின் பண்பையும் செறிவையும் விளங்கிகொள்ள கடத்துதிறனைப் பயன் படுத்துவார் | • கடத்துவலு (Conductance)<br>• கடத்துதிறன் (Conductivity)<br>• கடத்துதிறன் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள்<br>  • கரையத்தின் தன்மை: உருகிய மின்பகுபொருள், செறிந்த, ஐதான மின்பகுபொருட் கரைசல், மின்பகா கரைசல்<br>  • செறிவு<br>  • வெப்பநிலை | 04 |
| | 14.2 சமநிலையிலுள்ள மின்வாய்கள் பற்றியும் அவற்றுடன் தொடர்புடைய மின்வாய்த்தாக்கங்களையும் நுணுகியாய்வார் | • சமநிலையிலுள்ள மீள்தகுமின்வாய்களும் அவற்றின் மின்வாய்த்தாக்கங்களும்<br>  • உலோகமும் உலோகஅயனும்<br>  • உலோகமும் கரையாத உப்புக்களும்<br>  • வாயு மின்வாய்கள் ($O_2$ , $H_2$, $Cl_2$)<br>  • தாழ்த்தேற்றும் மின்வாய்கள்<br>    உ+ம் : $Pt(s)/Fe^{2+}(aq),Fe^{3+}(aq)$ | 02 |
| | 14.3 மின்னிரசாயனக் கலங்களின் பண்புகளை தீர்மானிப்பார் | • திரவச்சந்தி<br>  • உப்புப்பாலம்<br>  • வேறாக்கி (Seperator)<br>• திரவச்சந்தியில்லாத கலங்கள்<br>• மின்வாய் அழுத்தம் ($E$)<br>• நியம மின்வாய் அழுத்தம் ($E^{\theta}$)<br>• மின்னிரசாயனத்தொடர்<br>  • மின்னிரசாயன தொடரில் அமைவிடத்தைப் பொறுத்து, மூலகங்களின் இயல்புகள். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | • மின்னிரசாயன தொடரில் மூலகங்களின் அமைவிடத் திற்கும் இயற்கையில் அவற்றின் நிலவுகைக்கும் பிரித்தெடுப்புக்கும் இடையிலான தொடர்பு.<br>• கலத்தாக்கங்கள்<br>• கலமொன்றின் மின்னியக்கவிசை<br>$E_{cell} = E_{RHS(\text{கதோட்டு})} - E_{LHS(\text{அனோட்டு})}$<br>(நேன்ஸ்ட் சமன்பாடு தேவையில்லை)<br>• **பல்வேறுபட்ட கலங்களின் மின்னியக்கவிசையை அளத்தல்.** | |
| | 14.4 வேறுபட்ட வகையான கலங் களைத் தேடியாய்வார். | • முதன்மைக்கலங்கள்<br>• டானியல்கலம்<br>$H_2/O_2$<br>• லெக்லான்சின்கலம்<br>• எரிபொருள்கலங்கள்<br>( எரிபொருள்கலம் மட்டும்)<br>• துணைக்கலங்கள்<br>• ஈய சேமிப்புக்கலம் | 04 |
| | 14.5 மின்பகுப்பை மேற்கொள்ளும் போது பூர்த்தி செய்யவேண்டிய தேவைகளை இனங்கண்டு பரடேயின் மாறிலியைப் பயன்படுத்தி கணித்தல்களை மேற்கொள்வார். | • மின்பகுப்பின் கோட்பாடுகள்<br>• நீரின் மின்பகுப்பு<br>• செப்புமின்வாயை பயன்படுத்தி $CuSO_4$ கரைசலை மின்பகுத்தல்<br>• பிளற்றினம் மின்வாயைப் பயன்படுத்தி $CuSO_4$ கரைசலை மின்பகுத்தல்<br>• காபன் மின்வாயைப் பயன்படுத்தி NaCl கரைசலை மின்பகுத்தல் | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | • உருக்கிய NaCl இன் மின்பகுப்பு (கோட்பாடுகள் மட்டும்)<br>• பரடேயின் விதியின் பிரயோகங்கள்<br>• **நீரைமின்பகுத்தல் மூலம் ஐதரசன், ஒட்சிசன் வாயுக் களைத் தயாரித்தல்.**<br>• **நிக்கல், செப்பு மின்முலாமிடுதல்.** | |
| | 14.6 மின்னரிப்பை கட்டுப்படுத்தும் விதத்தை நுணுகியாய்வார். | • ஈருலோகஅரிப்பு<br>• கதோட்டுக்காப்பு<br>• உயிர்ப்பின்மைத்தன்மை (Passivation)<br>• **அரிப்பை ஒரு மின்னிரசாயனச் செயற்பாடாக பரிசோதனை ரீதியாகக் கற்றல்.** | 04 |

**அலகு 15 - கைத்தொழிலும் இரசாயனமும்** **41 பாடவேளை**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **15.0**<br>**சில மூலகங்களினதும் சேர்வைகளினதும் இருக்கை, கைத் தொழில் ரீதியான பிரித்தெடுப்பு/ உற்பத்தி, பயன்கள் என்பவற்றை நுணுகியாய்வார்.** | 15.1 *s* தொகுப்பு மூலகங்களின தும் சேர்வைகளினதும் இருக்கை, கைத்தொழில் ரீதியான பிரித்தெடுப்பு/ உற்பத்தி, பயன்கள் என்ப வற்றை நுணுகியாய்வார். | • சோடியத்தின் பிரித்தெடுப்பும் (டவுண்கலமுறை) பயன்களும்<br>• உற்பத்தி<br>• கறி உப்பு<br>• NaOH<br>• சவர்க்காரம்<br>• $Na_2CO_3$ (சோல்வேமுறை)<br>• $CaCO_3$ யை மூலப்பொருளாகப் பயன்படுத்தி நீறாத சுண்ணாம்பு, வெளிற்றும்தூள், $CaC_2$ என்பவற்றை தயாரித்தல். | 08 |
| | 15.2 *p* தொகுப்பு மூலகங்களின தும் சேர்வைகளினதும் இருக்கை, கைத்தொழில் ரீதியான பிரித்தெடுப்பு / உற்பத்தி, பயன்கள் என்ப வற்றை நுணுகியாய்வார். | • உற்பத்தியும் உபயோகங்களும்<br>• அமோனியா (ஏபர்முறை)<br>• யூரியா<br>• நைத்திரிக்அமிலம் (ஒஸ்வால்ட் முறை)<br>• பொசுபேற்று வளமாக்கிகள்<br>• சல்பூரிக்அமிலம் (தொடுகை முறை) | 06 |
| | 15.3 *d* தொகுப்பு மூலகங்களின் கைத்தொழில் ரீதியான பிரித்தெடுப்பை நுணுகி யாய்வார். | • இரும்பு பிரித்தெடுப்பு | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| | 15.4 அன்றாட வாழ்க்கையில் பல் பகுதியப்பதார்த்தங்களை வினைத்திறனுடன் பயன்படுத்து வார். | • கூட்டல், ஒடுக்கற் பல்பகுதியங்களும் பல்பகுதியமாக்கல் செயன்முறையும்<br>• இயற்கை இறப்பரின் (NR) கட்டமைப்பும் இயல்புகளும் பயன்களும்<br>  • NR வல்கனைசுப்படுத்தல்<br>  • இறப்பர் சேர்வையாக்கம்<br>• தொகுப்பு பல்பகுதியங்களின் கட்டமைப்பு, இயல்புகள், பயன்கள்<br>  • பொலி எதிலீன் (PE)<br>  • பொலிவைனைல் குளோரைட்டு (PVC)<br>  • பொலிஸ்ரைறின் (PS)<br>  • பொலிஏமைட்டுக்கள்<br>  • பொலிஎஸ்தர்<br>  • டெப்லோன் (Teflon)<br>  • பேக்லைட்டு<br>  • யூரியா போமல்டிகைட்டு | 10 |
| | 15.5 தாவரப் பகுதிகளை அடிப் படையாகக் கொண்ட இரசாயன கைத்தொழில் சில வற்றை நுணுகியாய்வார். | • காபன் சேர்வைகளின் மூலமாக தாவரங்களை நோக்குதல்.<br>• தாவரங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் (உணவுக் கைத்தொழில் தவிர)<br>  • கடதாசி - செலுலோசின் பயன்<br>  • சாறெண்ணெய் - ஆவிப்பறப்புள்ள சேர்வைகளின் பயன்.<br>  • சவர்க்காரம் - கொழுப்பினதும் எண்ணெயினதும் பயன்.<br>  • மருத்துவப் பொருட்கள் - மருத்துவ சேர்வைகளின் பயன்பாடு.<br>  • எதனோல் - மாப்பொருளினதும் வெல்லத்தினதும் பயன்பாடு. | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| | | • தாவரங்களிலிருந்து சேர்வைகளைப் பிரித்தெடுத்தல்<br>• கொதிநீராவி காய்ச்சி வடித்தல் - சாறெண்ணெய்<br>• கரைப்பான் பிரித்தெடுப்பு - மருத்துவ சேர்வைகள் (சேர்வைகளின் கட்டமைப்புச் சூத்திரம் அவசியமல்ல.)<br>• நிறப்பதிவு நுட்பமுறையைப் பயன்படுத்தி சேர்வைகளின் கலவையை பகுத்தலும் வேறாக்கலும் - அகத்துறிஞ்சல், பங்கீட்டு நிறப்பதிவு நுட்பமுறையின் (Partition chromatography) அடிப்படைக் கோட்பாடுகள்.<br>• சாறெண்ணெயில் வாயு நிறப்பதிவு முறையின் பயன்கள் (Gas chromatography)<br>• **இலையின் நிறப்பொருள் கலவையை தாள் நிறப்பதிவு நுட்பமுறையைப் பயன்படுத்தி வேறாக்கல்.** | |
| | 15.6 கனிய மூலவளங்களை அடிப் படையாகக்கொண்ட இரசாய னக் கைத்தொழில் சிலவற்றை நுணுகியாய்வார். | • சீமெந்து உற்பத்தியுடன் தொடர்புடைய இரசாயனம்.<br>• உருத்தைல் / இல்மனைற்றிலிருந்து Ti ம், $TiO_2$ம் பிரித்தெடுப்பு.<br>• மசகுஎண்ணெயும் பெற்றோலிய உடைப்பும் | 05 |

## அலகு 16 - சூழல் இரசாயனவியல் 24 பாடவேளை

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **16.0**<br>**சூழலின் சமநிலையைப் பேண இரசாயனவியலின் அறிவைப் பிரயோகிப் பார்.** | 16.1 சூழலின் அமைப்பையும் அங்கு உயிர்வாழ தேவை யான தொடர்புகளையும் நுணுகியாய்வார். | • சூழலின் அமைப்பும் அதன் முக்கியத்துவமும்<br>• வளிமண்டலம்<br>• நீர்மண்டலம்<br>• புவிமண்டலம்<br>• பூமியில் உயிர்கள் வாழ பிரதான புவி உயிரியல் செயற்பாடுகளின் பங்களிப்பு<br>• காபன் வட்டம்<br>• ஒட்சிசன் வட்டம்<br>• நைதரசன் வட்டம்<br>• நீர் வட்டம் | 06 |
| | 16.2 மனித செயற்பாட்டால் சூழலில் ஏற்படும் மாற்றங் களை ஆராய்வார். | • வளி மண்டல அமைப்பில் மிகையான $CO_x$ , $So_x$ , $NO_x$ ஐதரோகாபன் மற்றும் துணிக்கைகள் சேர்வதால் ஏற்படும் சூழல் மாசாக்கமும் சுகாதாரத் தீங்கும்.<br>• பச்சைவீட்டு விளைவு<br>• வளி மாசடைவதால் உருவாகும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளல்.<br>• ஓசோன்படை சிதைவுறல்<br>• ஒளி இரசாயனப் புகார் (Photochemical smog)<br>• அமில மழை<br>• பூகோள வெப்பமாக்கல்<br>• **மழைநீரின் அமிலத்தன்மையைத் நுணுகி ஆராய்தல்** | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 16.3 நீர்மண்டலத்தினதும் குடிநீரினதும் தொற்றை ஆராய்வார். | • நீர்மாசாக்கத்துக்கான முதல்கள்<br>• நீரின் தரம்<br>  • பௌதிகக் காரணிகள் (வெப்பநிலை, pH, கடத்து திறன், கலங்கல் தன்மை)<br>  • கரைந்துள்ள $O_2$ ன் அளவு<br>  • Biological Oxygen Demand<br>  • கரைந்துள்ள அயன் சேர்வைகள்<br>• நீரை தூய்தாக்கும் செயற்பாடுகள்<br>  • அடைதல் (Sedimentation)<br>  • திரளல் (Coagulation)<br>  • ஒன்றுசேர்த்தல் (Flocculation)<br>• தொற்றுநீக்கற் செயற்பாடுகள்<br>  • குளோரின் பாவித்தல்<br>  • ஓசோன் பாவித்தல்<br>  • UV கதிர்ப்பு பாவித்தல்<br>• **வின்கிலரின் (Winkler) முறையால் நீர்மாதிரி ஒன்றில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவைத் துணிதல்** | 08 |
| | 16.4 நிலம் தொற்று அடைதலையும் திண்மக் கழிவு பற்றியும் ஆராய்வார். | • இயற்கை உள்ளீடுகளும் மண்வளமும்<br>• மண் மாசாக்கத்துக்கான முதல்கள்<br>  • வீட்டுக் கழிவுகள்<br>  • விவசாய இரசாயனப் பொருட்கள்<br>  • பாரமான உலோகங்கள் நிலத்தை அடைதல்.<br>  • e- கழிவு (கணினி, இலத்திரனியல் சாதனங்கள், மின்கலங்கள், CFL மின்குமிழ் போன்றன)<br>• கழிவு முகாமைத்துவம்<br>  • 3R முறைமை<br>  • உயிர்வாயு தயாரிப்பு<br>  • அழுத்துதல் (Composting)<br>  • சாம்பராக்கல் (Incineration) | 04 |

## 4.0 கற்றல் - கற்பித்தல் செயல்முறை

தற்போதைய கல்வியின் உலகளாவிய போக்கானது, தேர்ச்சி அடிப்படையான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதாகும். இது கூட்டு முறையான கற்றலை மாணவர் மைய செயற்பாடுகளினூடாக விருத்தி செய்யும். இம்முறையில் கற்றலானது கற்பித்தலை விட மேன்மையாகக் காணப்படும். மாணவர்கள் செயற்பாடுகளில் உயிர்ப்புடன் ஈடுபடுவதன் மூலம் அவர்களது தனியாள் திறன்கள், சமூகத்திறன்கள், விவேகத்திறன்கள் என்பன விருத்தி அடைவது அதிகரிக்கப் பின்வருவனவற்றிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

- முடியுமானவரை விடய உள்ளடக்கத்தை 5E மாதிரி செயற்பாடுகளினூடாக விளக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களை செயற்பாட்டு ரீதியான அனுபவத்தை பெறுவதற்கு இடம் கொடுத்தல்.
- தேவையான இடங்களில் நம்பத்தகுந்த மூலங்களிலிருந்து அறிவையும் தகவல்களையும் பெறுவதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.

## 5.0 பாடசாலைக்கொள்கையும் நிகழ்ச்சித் திட்டங்களும்

- குறித்த கற்றல் விளைவுகளை அடைவதற்காக ஆசிரியருக்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறையைப் பின்பற்றுவதற்குச் சுதந்திரம் உண்டு.

- ஒவ்வொரு அலகினதும் கோட்பாட்டு ரீதியான கூறுகளை விளக்குவதற்குத் தடித்த எழுத்துக்களில் தரப்பட்ட செயற்பாட்டுக் கூறுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

- மாணவர்களின் ஆற்றல்களானது மேலதிக பாடவிதானச் செயற்பாடுகள், வேறு வாசிப்பிற்கான பிற்சேர்க்கைகள், கணினி கற்றல் மென்பொருள் போன்ற கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள் மூலம் அதிகரிக்கப்பட வேண்டும்.

- வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, மாணவர்களின் திறனை விரிவுபடுத்துவதற்குப் பின்வரும் இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

  - இரசாயனவியலின் பல்வேறு பகுதிகளையும் தொடர, பாடசாலைக் கழகங்களை நிறுவல்.
  - இரசாயனவியலின் பிரயோகங்களை அவதானிக்கக்கூடிய இடர்களுக்கான களப் பயணங்களை மேற்கொள்ளலும், அவற்றிற்கான அறிக்கைகளைத் தயார்படுத்தலும்

- பாடசாலை மட்ட போட்டிகளையும் கண்காட்சிகளையும் ஒழுங்கு செய்தல்.
- தேவையான பகுதிகளுக்கு வளவாளர்கள் மூலம் விரிவுரைகளை நடத்த ஒழுங்கு செய்தல்.
- பாடசாலை வெளியீடுகளை தயாரித்தல்.
- பட்டிமன்றங்கள், விஞ்ஞானதின நிகழ்வுகளை நடாத்துதல்

- விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், கணினி வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தலும், உள்ளக, வெளியக மேற்பார்வைகளுக்கும் பாடசாலை நிர்வாகமே பொறுப்பு உடையதாகும்.

- பாடசாலைக்கொள்கையையும் நிகழ்ச்சித்திட்டத்தையும் விருத்தி செய்வதற்குப் பொருத்தமான ஆசிரியர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கியதாக செயற்குழு ஒன்றை உருவாக்குவது விரும்பத்தக்கது.

- பாடசாலையானது மாணவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக செயற்படுவது மிக முக்கியமானதாகும்.

- பாடசாலையானது கொள்கை இலக்குகளை அடைவதற்கான பல செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்ய வேண்டும். ஒரு குறித்த வருடத்தில் செயற்படுத்தவுள்ள செயற்பாடுகளைத் தீர்மானிக்கும்போது, பாடசாலையானது முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவற்றை இனங்காண்பதுடன், நேரத்தையும் வளக்கட்டுப்பாட்டையும் கருத்தில் எடுக்க வேண்டும்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தேவையான விவரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.